Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Food is a Combination of Land and Water

**Dr. M. Pushpakavalli,** Assistant Professor, APC Mahalakshmi Women's College, Thoothukudi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-5061-6255**
**DOI: 10.5281/zenodo.6622293**

## Abstract

*Ecosystems are important for the survival of organisms. This situation is defined by the balance of the five elements. Good land is still the mainstay of life. The first search for life is the food search. Four lands of the Tamils show that food is a combination of land and water. The land of Kurinji, Mullai, Marutham, Neithal and Palai meets the food needs of the people living there. For the people of Kurinji, Mullai and Marutham lands, the food culture is the product of land and water. The yield of mangrove fields with water bodies and reservoirs reflects the food civilization of those people. The Neithal and Palai lands are fed by the materials available from the area. The food available in the living environment is the best and contributes to the preservation and restoration of heritage by cultivating life and consciousness that also leads to lasting life. The purpose of this article is to highlight the fulfilment of the need for life by the way of the land. Food is very important for human survival. Food is supposed to nourish the senses of life. It is a biological principle that living things depend on each other from knowledge to enlightenment.*

**Keywords:** Food, Land, Water, Ecosystem.

## References

[1] Dr. Gnanasambandar. S. *Nannool Ealuthu*. Kathir Publications, Thiruvaiyaru.
[2] Pera.Sarathampal. Che. (Vol.), *Thoughts*. New Century Book House, Tirunelveli.
[3] Seyapal.ira. *Akananuru*, New Century Book House, Chennai, 2004.
[4] Thirugnanasambandar, Thevaram. 2005, Kasith Thirumadam Thiruppanandal.
[5] Thirumoolar. Thirumandiram. 1991, Kasimadam Thiruppanandal.
[6] Balasubramaniam KV. (UA), *Purananuru*, New Century Book House, Chennai, 2004.
[7] Balasubramaniam K.W. (U.A.), Nursery, New Century Book House, Chennai, 2004.
[8] Puliyur Kesigan. Text. *Tolkappiyam.* Sharda Publishing, Chennai, 2012.
[9] Manikkanar.A. Part I, Vardhamanan Publishing, Chennai-17, 1999.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# உணவெனப்படுவது நிலத்தொடு நீரே

**முனைவர் மு.புஷ்பகவல்லி,** உதவிப்பேராசிரியர், ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.
**ORCiD: https://orcid.org/0000-0002-5061-6255**
**DOI: 10.5281/zenodo.6622293**

**ஆய்வுச்சுருக்கம்**

*உயிரினங்கள் வாழ்வதற்கேற்ப உயிர்ச்சூழல் மிகமுக்கியமானதாகும். இச்சூழல் பஞ்சபூதங்கள் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ளது. நிலமும் பொழுதும் வாழ்வின் முதற்பொருளாக விளங்குகிறது. உயிர் களின் முதல் தேடல் உணவுத் தேடலாகும். நிலமும் நீரும் இணைந்ததே உணவு என்பதை புறநானூற்றுப் பாடல் வழி அறியலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலம் அங்கு வாழும் மக்களுக்கு உணவுத் தேவையை நிறைவு செய்கிறது. குறிஞ்சி நிலவாழ் மக்களுக்கு அந்நிலமும் அருவிநீரும் சேர்ந்து விளைகின்ற விளைபொருட்கள் உணவுப்பண்பாடாகிறது. முல்லை நிலத்தில் காட்டாறு கலந்து உருவாகின்ற உற்பத்திப் பொருட்கள் அம்மக்களுக்கு உயிர்த்தேவையை நிறைவு செய்கிறது. நீர்நிலைகளும் நீர்த்தேக்கங்களும் கொண்ட மருதநில வயல்வெளிகளின் விளைச்சல் அம் மக்களின் உணவு நாகரிகத்தை எடுத்துரைக்கிறது. நெய்தல் நிலமக்களுக்கு கடலில் இருந்து கிடைக்கின்ற பொருட்கள் உணவாகிறது. வாழும் சூழலில் கிடைக்கின்ற உணவு சிறந்த உணவாகவும் உயிரையும் உணர்வையும் வளர்த்து மரபை பேணிக் காப்பதற்கும் மீட்டெடுப்பதற்கும் உறுதுணையாக உள்ளது. நிலைத்த வாழ்விற்கும் வழிவகுக்கிறது. நிலத்தின் வழி உயிர்த்தேவை நிறைவு பெறுவதை எடுத்துரைப்பது இக் கட்டுரையின் நோக்கமாகிறதுமனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு மிக முக்கியமானதாகும். உணவானது உயிரை உணர்வை உடம்பை வளர்ப்பதாக அமைய வேண்டும் ஒரு நிலத்தில் வாழும் மக்கள் அந்நிலத்தில் விளைகின்ற விளைபொருட்களை உண்டு வாழ்வது இயற்கையின் நியதியாக உள்ளது. உயிர்கள் ஓர் அறிவு முதல் ஆறறிவு உயிர் வரை ஒன்றையொன்று சார்ந்து வாழ்வது உயிரியியல் கொள்கையாகும்.. சார்ந்து வாழ்தல் என்பது உயிர்த்தேவை மட்டுமன்றி உற்றறிதல் முதல் மனதால் அறியும் சிந்திக்கின்ற ஆறறிவு வரை அறிவைத்தீர்மானிக்கிறது.*

**திறவுச்சொற்கள்:** உணவு, நிலம், நீர், சூழ்நிலை மண்டலம்.

**முன்னுரை**

உயிர்க்கோளத்தில் எண்ணற்ற உயிர்கள் பல்கிப் பெருகி வாழ்ந்து வருகின்றன. தமிழ் இலக்கியங்கள் வாழ்வதற்கான உயிர்ச்சூழல் மிகமுக்கியமானது என்பதை எடுத்துரைக்கின்றன. இச்சூழலை தொல்காப்பியர் பஞ்சபூதங்கள் தம்முள் தாம் கலந்து இருக்கும் தன்மை கொண்டு வரையறுத்துக் கூறுகிறார். இவ்வரையறையைப் பேணிக்காத்து வாழ்வது வளமான வாழ்வியலுக்கு அடித்தளமாகிறது. நீர், நெருப்பு, காற்று, வானம் போன்றவை நிலமாகிய முதற்பொருளுக்குள் முறைப்படுத்தப்பட்டு இருப்பதை அறியமுடிகிறது. வாழ்வின் முதற்பொருள் நிலமும் பொழுதும் என்பதை வலியுறுத்தி தொல்காப்பியமும், சங்க இவக்கியப் பாடல்களும் கருத்தாக்கங்களாகவும், கோட்பாடுகளாகவும் சான்று பகர்கின்றன.தொல்காப்பியரின் திணைக்கோட்பாட்டில் முதல் கரு உரிப்

பொருளுக்கு முக்கியமானதாகத் திகழ்வது நிலமும் பொழுதுமாகும். உணவுத் தேடலே உயிர்களின் முதல்தேடலாகும். மனித இனப்பண்பாட்டில் பல்வேறு நிலையைக் கடந்து வளர்ச்சி நிலையை அடைந்தாலும் உணவுத் தேடலின் முக்கியத்துவத்தையும் மானிடத்தின் வாழ்வியலையும் அறிவது நோக்கமாகும். அறிவுத் தேடலில் மரபுசார் உணவுத்தேடலின் நிலையை ஆராய்வது இக்கட்டுரையின் கருப்பொருளாகும்.

**திணை நிலம், ஒழுக்கம்**

திணை என்பது நிலம் நிலைத்தத் தன்மையுடையது. நிலையான வாழ்க்கைக்கும், உயிர்களின் பெருக்கத்திற்கும் காரணமாகிறது. உயிர்கள் தன்னுடைய மரபை வழிவழியாக பேணுவதற்கு மிக முக்கிய காரணியாகவும் அமைகிறது. நிலம் என்பது முதற்பொருளாகவும், அந்நிலத்தின் வழி வாழ்கின்ற மக்களின் உரிப்பொருளாகவும் (ஒழுக்கம்) திகழ்கிறது. ஐம்பூதங்கள் கலந்த மயக்க நிலையில் நிலத்துக்குள் ஒவ்வொரு காலநிலையிலும் ஏற்படுகின்ற பருவ மாற்றங்கள் பொழுதாகின்றன. நிலமாகிய முதற்பொருளின் உயிர்ப்புத் திறன் கருப்பொருளாகிறது உணர்வுத்திறன் உரிப்பொருளாகிறது.

**"நிலம் தீ நீர் வளி விசும்போடைந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்" (தொல், பொருளதிகாரம் - 635, ப.830)**

என்ற தொல்காப்பியரின் இயற்கை கட்டமைப்பு முறை வாழ்வதற்கான நெறியாகிறது. மேலும்

**மண் திணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை. (புறநானூறு 2: 1-6)**

என்று புறமும் சான்று பகர்கிறது. நிலத்தின் அமைப்பு, தன்மை இவற்றின் அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற பகுப்பு முறை நானிலமாகக் காட்சியளிக்கிறது. பாலை என்ற நிலம் இம்முறைமையில் திரிந்த வடிவமாகிறது. நிலங்களின் வழிமக்களின் வாழ்க்கை முறையும் அதன்வழி உயிர்ப்புத் திறனும், உணர்வுத்திறனும் அமைவதைக் காணமுடிகிறது. ஒருதிணையில் உள்ள மண்ணும் மனிதனும், உடம்பும் உயிரும் போன்று பிரிக்கமுடியாதத் தன்மையுடன் வாழ்வது முறையான வாழ்வியல் முறையாகும்.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம் புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையான் சொல்லவும் படுமே" (தொல் பொருள் அகத்திணையியல் -5, ப.9)**

என்ற நிலப்பகுப்பு முறைமையை தொல்காப்பியத்திலிருந்து அறியலாம்.

**உணவெனப்படுவது நிலத்தொடு நீரே**

மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு மிக முக்கியமானதாகும். உணவானது உயிரை உணர்வை உடம்பை வளர்ப்பதாக அமைய வேண்டும் ஒரு நிலத்தில் வாழும் மக்கள் அந்நிலத்தில் விளைகின்ற

விளைபொருட்களை உண்டு வாழ்வது இயற்கையின் நியதியாக உள்ளது. உயிர்கள் ஓர் அறிவு முதல் ஆறறிவு உயிர் வரை ஒன்றையொன்று சார்ந்து வாழ்வது உயிரியியல் கொள்கையாகும். சார்ந்து வாழ்தல் என்பது உயிர்த்தேவை மட்டுமன்றி உற்றறிதல் முதல் மனதால் அறியும் சிந்திக்கின்ற ஆறறிவு வரை அறிவைத்தீர்மானிக்கிறது. இதனையே தொல்காப்பிய மரபியல் நூற்பா சான்று பகர்கிறது.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் உயிர்களின் உணவுத் தேவையை அப்பகுதியில் உள்ள நிலவளமும் நீர்வளமும் உறுதி செய்கிறது இவையே உணவுத் தேவைக்கு நிரந்தரத் தீர்வாகிறது. இதனையே,

**“நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே**
**நீரும் நிலமும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசினோரே” (புறம் 18:18-23)**

என்ற புறநானுற்றுப் பாடலின் மூலம்சமூகம் குறித்த உயரிய சிந்தனையையும்உயிர்களின் உணவுத் தேவைக்கு ஏற்ப உற்பத்தித் திறனின் அவசியத்தையும், நிலநீர்க் கொள்கையும் எடுத்தியம்புகிறது. ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் வாழும் உயிர்களுக்கு அப்பகுதியில் அதே சூழலில் விளைகின்ற விளைபொருள்கள் வளம் சேர்ப்பனவாக அமைகிறது. வேறொரு சூழலில் விளைகின்ற விளைபொருள்கள் அவ் உயிர்களுக்கு உணவுத்தேவையை, உயிர்த்திறனை நிறைவு செய்வதில் முழுமையடைவதில்லை.

**“தெரிவரும் பெருமையும் திண்;மையும் பொறையும்**
**பருவ முயற்சி அளவிற் பயத்தலும்**
**மருவிய நன்னில மாண்பாகும்மே” (நன்னூல், எழுத்து -27, ப.22)**

என்று நன்னிலத்தின் பருவ விளைச்சல் உயிர்களின் உண்மை வாழ்க்கைக்கு சான்றாகிறது.

**நாணிலமும் உணவும்**

குறிஞ்சி நிலத்தில் மலையும் மலை சார்ந்த பகுதியில் வாழ்கின்ற மக்கள் அருவி நீரில் விளைகின்ற உணவுப் பொருட்களை உண்டு வாழ்கின்றனர். என்பதை புறநானூறு எடுத்தியம்புகிறது.

**“செம்புற்று ஈயரின் இன் அளைப் புளித்து**
**மென் தினை யாணர்த்து நந்தும் கொல்லோ” (புறம் 119: 3-4)**
**இதனையே மலைபடுகடாமும் சான்று பகர்கிறது.**
**“மணஇல் கமலும் மாமலைச் சாரல்**
**தேனினர் கிழங்கினர் ஊன் ஆர் வட்டியர்**
**சிறுகட் பன்றிப் பழுதுளி போக்கி**
**பொருது தொலை யானைக்கோடு சீர்; ஆக**
**தூவொடு மலிந்த காய கானவர்” (மலைபடுகடாம் 151-155)**

இவற்றிலிருந்து குறிஞ்சி நிலஉணவு அம்மக்களின் உணவுப் பண்பாடாகிறது. முல்லை நிலமானது காடும் காடு சார்ந்து வாழும் மக்களின் உணவுத் தேவையை நிறைவு செய்வதில் அந்நிலமும் காட்டாறும் ஆதாரமாகிறது.

**“நறுங்காடி கூட்டுவேம் யாங்கும்**

**புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்”(அகம் பா.எ 148)**

**“இதைப்புன வரகின் அவைப்பு மாண் அரிசியோடு” (பா.எ 214 குறுந்தொகை)**

என்பதிலிருந்து முல்லை நில மரபு சார் உணவு முறை முல்லை நிலமக்களின் உணவு நாகரிகத்தை சுட்டிக்காட்டுகிறது. மருதநில மக்கள் மனித இனப் பண்பாட்டில் வளர்ச்சி நிலை அடைந்தவர்கள் உற்பத்தித் திறன் கொண்டவர்கள் நிலத்தை பண்படுத்தி நீர்நிலைகளைப் பெருக்கி மழை நீரைத் தேக்கி வைத்து உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து வாழ்ந்து வந்தனர் என்பதை நற்றிணை சான்று பகர்கிறது.

**“கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையொடு**

**புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ்சோறு**

**நீர் உறு செறிவின் நாறுமுடி அழுத்த நின்**

**நடுநரொடு சேறி ஆயின்” (நற்றிணை 60: 3-6)**

நிலநீரின் வழியது உயிர்களின் உணவு என்பதை உணரமுடிகிறது.

**உற்பத்தித் திறனும் உயிர்த்திறனும்**

உயிருக்கு வளம் சேர்க்கும் உணவு உற்பத்தி மிக முக்கியமானதாகும். விதையிலிருந்து விருட்சங்கள் மரபு வழியில் உருவாவது மேன்மையானதாகும். உயிர்களின் உயிர்ப்புத் திறனை முளைப்புத் திறன் கொண்ட விதைகளே நிர்ணயிக்கிறது. மரபுவழியில் உற்பத்தி செய்யப்பட்ட காய்கள், கனிகள், விதைகள் போன்ற இயற்கை உணவில் வாழ்வதற்கான உயிர் ஆதாரங்கள் உள்ளன. உற்பத்தியின் அளவை அதிகரிக்கும் பொருட்டு உருவாக்கப்பட்ட கலப்பின விதைவகைகள், விதையில்லா விளைபொருள்கள், வீரியமூட்டப்பட்ட விதைகள் இவற்றால் உயிர்ப்பை உணர்வை உருவாக்குவதில் சிக்கல்கள்ஏற்படுகின்றன. கலப்பின வகைகள் தன் வகையை, மரபை, உயிரை, மீட்டெடுப்பதில்லை. மீட்டெடுப்புத்திறன் இல்லாத உணவுப் பொருள்களை உண்டு வாழும் மனிதனுக்கும் உயிர்ப்புத்திறன் குறைகிறது. பிறஉயிர்களுக்கும் தன்மரபை மீட்டெடுக்க முடியவில்லை. அக்கருத்தையே இராமலிங்க அடிகளார் உயிர்களின் வகை மாறாமல் வாழையடி வாழையாக இருந்து வருவதை திருவருட்பாவில் கூறியதாக

**“வாழையடி வாழையென**

**வந்ததிருக் கூட்டம்**

**மரபினில்யான் ஒருவனன்றோ” (சிந்தனைச் சரங்கள் ப.59)**

என்றும், உயிரின மரபு பற்றி கபிலர் என்றொரு முனிவர் கபிலர் அகவல் என்ற நூலில்

**“பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே**

**அவ்விரு சாதியல் ஆண்பெண்மாறிக்**

**கலந்து கருப்பெறல் கண்டதுண்டோ?” (சிந்தனைச் சரங்கள் ப.59)**

என்கிறார் ஒருகுதிரையும் கழுதையும் கலவி புரிவதால் கோவேறு கழுதை உண்டாகின்றது. ஆனால் கோவேறு கழுதைகள். தன் இனத்தை உயிர்ப்பிக்கும் திறனின்றி; மலடாகவே இருக்கும். பெற்றோர்களின் மரபு பிள்ளைகளிடம் இருப்பது நியதி. அம்மரபுத்தன்மை பெற்றோர்கள் வாழ்ந்த நிலச்சூழலிலும் அம்மரபு உருவான உணவிலும் பேணப்படுகிறது. நிலம் சார்ந்த, நிலத்தோடு இயைந்த

வாழ்வு நிறைவான முழுமையான நோயற்ற வாழ்வாகிறது. உற்பத்தித்திறன் கொண்ட விளைபொருள்கள் உயிரையும் மரபையும் பாதுகாக்கிறது என்பதை

**"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**

**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை" (மூன்றாம் திருமுறை, ப.எ-138, பா.எண்: 1)**

என்ற திருஞானசம்பந்தரின் திருமுறைப் பாடலும் நிலத்தின் மேன்மையையும் நிலைத்தத் தன்மையையும் நிலத்தோடு இயைந்து வாழ்வதையும் வலியுறுத்துகிறது.

**"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**

**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவு மாட்டார்**

**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**

**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" (திருமந்திரம் - ப.எ, 98,பா.எ.,724)**

என்ற திருமந்நிரம் கூறும் கருத்திலிருந்து உண்ணும் உணவு உடம்பை மட்டுமன்றி உயிர்ப்புத் திறன் கொண்ட உயிரை வளர்க்கும் என்பதன் நுணுக்கத்தினை எடுத்தியம்புகிறது. முளைப்புத் திறன் கொண்ட உணவில் உள்ள உயிர்ப்புத் திறன் உயிர் உறையும் உடம்பை வளர்க்கும் உபாயமாக உள்ளது.

**முடிவுரை**

உயிர்களின் உணவுத்தேடல் நிலம் மற்றும் நீரைச் சார்ந்து இருப்பதை அறியமுடிகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உணவை உற்பத்தி செய்து உண்டு வாழ்ந்ததை நிலம் சார்ந்து வாழும் வாழ்க்கை முறை உணர்த்துகிறது. இவ் இயற்கையோடு இயைந்த வாழ்வானது பருவங்களுக்கு ஏற்ப இயற்கையின் கொடையை கற்பகத்தருவாக உயிர்கள் உட்கிரகித்துக் கொள்கின்றன.

**துணைநூற் பட்டியல்**

[1] முனைவர் ஞானசம்பந்தர். ச. *நன்னூல் எழுத்ததிகாரம்.* கதிர்பதிப்பகம், திருவையாறு, 2009.

[2] பேரா.சாரதாம்பாள். செ. *சிந்தனைச்சரங்கள்*, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், திருநெல்வேலி, 2005.

[3] செயபால்.இரா, (உ.ஆ). அகநானூறு. நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[4] திருஞானசம்பந்தர். *தேவாரம்.* காசித் திருமடம், திருப்பனந்தாள், 2005.

[5] திருமூலர், *திருமந்திரம்.* காசித் திருமடம், திருப்பனந்தாள், 1991.

6] பாலசுப்பிரமணியம் கு.வே. (உ.ஆ), *புறநானூறு.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[7] பாலசுப்பிரமணியம் கு.வே. (உ.ஆ), *நற்றிணை.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[8] புலியூர்க்கேசிகன். உரை (உ.ஆ), *தொல்காப்பியம்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2012.

[9] மாணிக்கனார்.அ, (உ.ஆ), *பத்துப்பாட்டு* முதல்பாகம். வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.